# மதுரை மாநகராட்சி

## வரவு - செலவு நிதி மதிப்பீடு மாமன்றக் கூட்டம்

**2015**-ம் ஆண்டு மார்ச் **24-ம்** நாள் **செவ்வாய்க்கிழமை** காலை **10.00** மணிக்கு

அறிஞர் அண்ணா மாளிகை

பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்

மதுரை மாநகராட்சி 2015 - 2016-ம் ஆண்டு

**வரவு - செலவு நிதி மதிப்பீடு**

## மாமன்றக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

**அ) திருக்குறள் வாசித்தல்**

**திருக்குறள் :** ***"ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்***
***பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து"***

**பொருள் :** தமக்கு தீங்கிழைத்தாரை எதிர்நின்று தண்டித்தாரை ஒரு பொருளாக மதித்து மனத்தில் வைக்க மாட்டார்கள், ஆனால் பொறுத்தாரைப் பொன்னைப் பொதிந்து வைத்துக் காப்பாற்றுவது போலத் தம்மனத்தில் வைத்து என்றும் நினைத்துப் போற்றுவர்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன், தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன், இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்,245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

---

## <u>2015-16-ஆம் நிதியாண்டு வரவு–செலவு நிதி மதிப்பீடு</u>

**<u>B3 /006368/2013</u>**

1971- ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம் 186(1) வது பிரிவின்படி மதுரை மாநகராட்சி பொதுநிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி, ஆரம்பக்கல்வி நிதி, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்ட நிதி மற்றும் நகர்புற ஏழை மக்கள் அடிப்படை வசதி திட்ட நிதி ஆகிய கணக்குகளின் 2014-2015 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதி மதிப்பீடு மற்றும் 2015-16 ஆம் ஆண்டிற்கான நிதி மதிப்பீடு ஆகியவற்றை வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் வைக்கப்பட்டதில், மேற்படி குழுவின் 18.03.2015- ந் தேதிய 91ஆம் எண் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுடன், மேற்கண்ட 2014-15 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திருத்திய மதிப்பீடு மற்றும் 2015-16 ஆம் ஆண்டிற்கான விளைபயன் வெளிப்பாடு (Outcome Budjet) நிதி மதிப்பீடுகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**இடம் : மதுரை**
**நாள் : 24.03.2015**

(ஒம்..) **வி.வி.ராஜன் செல்லப்பா**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**B3/006368/13**

<u>வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு</u>

<u>கூட்டப்பொருள்</u>

1971- ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம் 186(1) வது பிரிவின்படி மதுரை மாநகராட்சி பொதுநிதி, குடிநீர் வடிகால் நிதி, ஆரம்பக்கல்வி நிதி, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்ட நிதி மற்றும் நகர்புற ஏழை மக்கள் அடிப்படை வசதி திட்ட நிதி ஆகிய கணக்குகளின் 2014-2015 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதி மதிப்பீடு மற்றும் 2015-16 ஆம் ஆண்டிற்கான விளைபயன் வெளிப்பாடு (Outcome Budjet) நிதி மதிப்பீடுகளுக்கு வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

<u>தீர்மானம் எண்.850</u>

**<u>1971- ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம் 186(1) வது பிரிவின்படி மதுரை மாநகராட்சி பொதுநிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி, ஆரம்பக்கல்வி நிதி, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்ட நிதி மற்றும் நகர்புற ஏழை மக்கள் அடிப்படை வசதி திட்ட நிதி ஆகிய கணக்குகளின் 2014-2015 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதி மதிப்பீடு மற்றும்</u>**

**<u>2015-16 ஆம் ஆண்டிற்கான நிதி மதிப்பீடு ஆகியவற்றை வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் வைக்கப்பட்டதில், மேற்படி குழுவின் 18.03.2015- ந் தேதிய 91ஆம் எண் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுடன், மேற்கண்ட 2014-15 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திருத்திய மதிப்பீடு மற்றும் 2015-16 ஆம் ஆண்டிற்கான விளைபயன் வெளிப்பாடு (Outcome Budjet) நிதி மதிப்பீடுகளையும் மாமன்றத்தில் விவாதிக்கப்பட்டு மாமன்றம் ஏகமனதாகஒப்புக்கொள்கிறது.</u>**

**<u>Cw1/008209/2015</u>**

## மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டுவரப்பெற்ற சிறப்பு தீர்மானம்

மதுரை மாநகராட்சி 2015-2016ம் ஆண்டிற்குரிய வரவு செலவு திட்ட அறிக்கையை (Budget) 24.03.2015 அன்று மாண்புமிகு மேயர் அவர்களால் மாமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட போது திராவிட முன்னேற்றக் கழக மாமன்ற உறுப்பினர்களாகிய 1. திரு.இ.முபாரக் மந்திரி (வார்டு எண் 67), 2. திரு.M.கண்ணன் (வார்டு எண்:91), திரு.M.சாதிக் பாட்ஷா என்ற நன்னா (வார்டு எண்:86) ஆகிய மூன்று மாமன்ற உறுப்பினர்களும் சபைக்கு அவதூறு ஏற்படும் வகையில் ஒழுங்கீனமாக செயல்பட்ட காரணத்தால் மேற்படி மூன்று மாமன்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி ஏனைய மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று மேற்படி மாமன்ற உறுப்பினர்களை அடுத்து நடைபெறவுள்ள 2 மாமன்ற கூட்டங்களுக்கு கலந்து கொள்ள இடைக்கால தடை விதித்து நடவடிக்கை எடுக்க மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் குறிப்பு.

**<u>தீர்மானம் எண்.851</u>**

**<u>மாமன்ற சபையை அவமதிப்பு செய்த மூன்று மாமன்ற உறுப்பினர்களை அடுத்து வரும் 2 மாமன்ற கூட்டத்தில் கலந்து கொள்ள தடை விதித்து ஏகமனதாக தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.</u>**